**செய்தி வெளியீடு எண் : 1003** **நாள்: 20.06.2022**

# மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்று (20.6.2022) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொகுப்பு அளவிலான வணிக நிறுவனங்களின் செயல்பாடுகளை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலகத்தில் ஆய்வு செய்தார்கள்.

தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வேளாண்மை - உழவர் நலத்துறை திரு சி. சமயமூர்த்தி, இஆப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு வேளாண்மை - உழவர்நலத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில், தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்பட பல்வேறு பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதனை கருத்திற் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை-உழவர் நலத்துறைக்காக கடந்த 2 ஆண்டுகளாக தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. உழவர் சந்தையினை, உலகச் சந்தைக்கு கொண்டு செல்வதையும், விவசாயிகளை, வர்த்தகர்களாக மாற்றுவதையும் மிக முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, வேளாண்மை- உழவர் நலத்துறை பணியாற்றி வருகிறது.

"தனி மரம் தோப்பாகாது" என்ற வாய்மொழிக்கேற்ப, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கோட்பாடிற்கேற்ப சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்கள் கூட்டாக பயிர் சாகுபடி திட்டம் தயாரித்து, அதற்கு தேவையான இடுபொருட்களை மலிவு விலையில் பெற்று உற்பத்தி செய்யும் விளைபொருட்களை ஒருங்கிணைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும், மேலும் அதிக வருமானம் பெறுவதற்கு விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதற்கும் "உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்" அணுகுமுறை உருவாகியது.

தமிழகத்தில் தற்போது ஏறக்குறைய 903 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இருந்தபோதும், இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் மேலும் சிறந்திட தொகுப்பு அடிப்படையிலான வணிக நிறுவனங்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுவது அவசியமாகின்றது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஜனநாயக மரபுப்படி, வெளித்தன்மையுடன் செயல்படுவது உறுப்பினர்களிடையே ஒற்றுமையையும், ஈடுபாட்டையும் பெரிதும் வளர்க்கும் என்பது நிதர்சனமான உண்மை . உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவது விவசாயிகளின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும். மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதி போன்ற செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். இத்தகைய தொகுப்பு அளவிலான வணிக நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகள், வணிக ரீதியான விவரங்கள் ஆகியவற்றை வழங்கிட வேண்டும். கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாட்டினை சீரமைப்பது அவசியம்.

தமிழக அரசு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பயிற்சி வழங்கிட ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மாவட்டந் தோறும் தற்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இப்பயிற்சிகளில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள்.

உணவு பதப்படுத்துதல் திட்டத்திலும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பயன்பெறுவதற்கு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்ட கருத்துருவில் 35 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் மானியம் பெற்றிடலாம். இதனை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பொதுவான உட்கட்டமைப்பு வசதிக்காக 35 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.3 கோடி வரை பெற்றிடலாம். மானியங்களை பெறுவதற்கு உரிய திட்டக் கருத்துருவினை வங்கி கடனுதவியுடன் தயாரித்து வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்கள். இந்த ஆய்வுக்கூட்டத்தின் நோக்கமானது முழு அளவில் இந்தியாவில் இதுபோன்ற அமைப்புகளின் செயல்பாட்டில் தமிழகம் முதல் இடம் பெறும் வகையில் செயல்பாடுகளை அதிகரித்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ். நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். தொகுப்பு அடிப்படையிலான வணிக நிறுவனங்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in